DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 200/2022**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகானந்தம்** | Caste | : |
| Father Name | : **பிச்சைமுத்து** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.03.2026.**

**PW - 2**

**(1 முதல் 16 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், திருவானைக்கோவில் மேலகொண்டையம்பேட்டை தெற்கு தெருவில் குடியிருக்கிறேன். கார் ஓட்டுனராக உள்ளேன். அசா.1 விஜயராஜ், சாட்சி மகேஷ்குமார், சாட்சி செல்வராஜ் ஆகியேரை தெரியும். ஆஜர் 1 முதல் 16 எதிரிகள் யாரையுமே எனக்கு தெரியாது. 2020 ஆம் ஆண்டு 09 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் மேலகொண்டையம்பேட்டை, நேருஜி பள்ளி அருகே கூட்டமாக இருந்தது. ஏதோ சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் அதை கேட்ட உடன் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டேன். யார் யாருக்கிடையே சண்டை நடந்தது என்றும், அதில் யாருக்கு காயம் ஏற்பட்டது என்றும் எனக்கு தெரியாது. சண்டை நடந்ததை நேரில் பார்க்கவில்லை. மற்ற சாட்சிகளான உத்தமன், பரமசிவம், செந்தில்குமார் ஆகியோரை தெரியும். போலிசார் என்னிடம்

கையொப்பம் மட்டும் வாங்கினார்கள், விசாரிக்கவில்லை.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் எங்கள் தெரு பசங்களுக்கும், நடு கொண்டையம்பேட்டை தெரு பசங்களுக்கும் ஏற்கனவே பிரச்சனையிருந்தது என்றும், பேச்சுவார்த்தை இல்லை என்றும், ஆஜர் எதிரிகள் அனைவரும் நடு கொண்டையம்பேட்டையை சேர்ந்தவர்கள் என்றும், 09.08.2020 அன்று இரவு 10.00 மணிக்கு அசா.1–ம், மகேசும் சேர்ந்து மகேசின் அப்பாவிற்கு மாத்திரை வாங்க இருசக்கர வாகனத்தில் போனபோது, அய்யன்வெட்டி தெருவில் ஐஸ்வர்யம் அப்பார்மெண்ட் அருகே ஆஜர் எதிரிகள் அசா.1–யும், மகேசையும் கெட்ட வார்த்தையால் திட்டி, சவுக்கு கட்டானாலும், கைகளாலும் அடித்து தாக்கி கொலை முயற்சி செய்ததாக சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் மகேஷை தாக்கி, அசா.1 வண்டியையும் அடித்து சேதப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு, வழக்கிலிருந்து எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.